மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 117, திரு. ஆஸ்டின், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

117—

ஓய்வூதியம்

***16251—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, மின்சார வாரியத்தில் வழங்குவதுபோல் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மின்சார வாரியத்தில் வழங்குவதுபோல் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

திரு. ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியைக் கேட்பதற்கு முன்பாக, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து கேள்வியை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக அடிக்கல்லை மட்டும் போட்டுவிட்டு, All India Medical Council-க்கு அனுமதி கேட்டுக் கடிதம்கூட எழுதாமல், மாவட்டத்து மக்களை...(மணியடிக்கப்பெற்றது)*

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதற்கெல்லாம் நேற்று நன்றி சொல்லிவிட்டார்கள். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆஸ்டின்: *வாய்ப்புக் கிடைக்கவில்லை, அதனால்தான் இன்றைக்கு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. ஆஸ்டின்: *மாவட்டத்து மக்களைக் கடந்த ஆட்சியாளர்கள் ஏமாற்றி வந்த நிலையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே,*

துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியினை ஒதுக்கி, All India Medical Council மூலமாக அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களுடைய சார்பில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆவின் நிறுவனமானது, கடந்த காலத்திலே நஷ்டத்திலே இயங்கி வந்தது. தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 2003-2004 ஆம் ஆண்டிலே நஷ்டத்தை எல்லாம் சரி செய்து, கிட்டத்தட்ட 13 இலட்சம் ரூபாய் இலாபத்திலே இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. சுமார் 118 ஊழியர்கள் அங்கே பணியாற்றி வருகின்றார்கள். அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஏற்கெனவே அவர்கள் வாங்கி வந்த 49 சதவிகிதம் பஞ்சப்படியானது, 2003-லே 52 சதவிகிதமாகவும், இந்த ஆண்டிலே 55 சதவிகிதமாகவும் அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அதுபோல, ஏற்கெனவே 5 சதவிகிதம் Personal pay வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்து இருந்தது. இந்த உயர்த்தப்பட்ட பஞ்சப்படியும், Personal pay-யும் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, உடனடியாக இந்தப் பணம் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஒன்றியத்தைப் பொறுத்தவரை, அவர் குறிப்பிட்ட அந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணம், சில உரிமைகள், அவர்களுக்குத் தேவையான அந்த உதவிகளை ஆய்வு செய்து, அங்கிருந்து அந்தக் கோரிக்கைகள் நம்முடைய ஆவின் Commissioner அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்குமேயானால், அது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அதுபோல, ஆவின் ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வருங்கால வைப்பு நிதித் திட்டம், சிறப்பு சேம நலத் திட்டம் மற்றும் பணிக்கொடைத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் நிதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

118—

ஆவின் பால் உறைகள்

***32037—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உபயோகப்படுத்தப்பட்ட ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்தி சில தனியார் போலி பால் தயாரிப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சில தனி நபர்கள் பாலில் தண்ணீர் கலப்பதுடன், உபயோகப்படுத்தப்பட்ட ஆவின் பால் உறைகளையும் மீண்டும் பயன்படுத்துகிறார்கள் என்று புகார்கள் வந்துள்ளன.

(ஆ) அவர்கள்மீது காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கேள்வியாகவே கேட்டு விடுகிறேன். இப்படி எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை வழக்குகள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளன? தனியார் பால் ருசியாகவும், பால் அதிக நாட்கள் கெடாமல் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் Hydrogen Per Oxide, Caustic soda, Sona seal போன்ற இரசாயனப் பொருட்கள் கலக்கப்படுகின்றன. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உட்கொள்கின்ற உணவு என்பதால், இதனால் குடற்புண் போன்ற நோய்கள் உருவாகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தனியார் பாலுக்குத் தரக் கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்படுமா? தமிழகத்திற்குத் தேவையான அளவிற்குப் பால் கொள்முதல் உள்ளதால், தனியார் பாலுக்கு நுழைவு வரி விதித்தால் ஆவின் பால் விற்பனை அதிகரிக்க